From-39

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No. 65/2012

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : Jeyaraj @ Malar | Father/Husband Name | : Nalluchamy |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 06.07.18. | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2018.

முதல் விசாரணை:

நான்கொன்னப்பட்டியில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். எதிரிகளை தெரியும். சுமார் 6, 7 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் மாலை சுமார் 7 மணியளவில் எங்கள் ஊரிலுள்ள மந்தைக்கும் எதிரிகளின் வீட்டிற்கும் இடையே பஞ்சாயத்து பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது அவர்கள் அசிங்கமாக பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களிடம் எனது அம்மா சென்று அசிங்கமாக பேசாதீர்கள் என்று சொன்னதற்கு எதிரிகள் அணைவரும் சேர்ந்து கம்பாலும், கையாலும் எனது அம்மாவை அடித்தார்கள். அதில் எனது அம்மா கீழே படுத்துவிட்டார். நான் எனது அம்மாவை தூக்கும்போது எல்லாரும் என்னையும் அடித்தார்கள். நான் எனது அம்மாவை தூக்கும் பதற்றத்திலிருந்ததால் எதிரிகள் என்னை கம்பை வைத்து வயிறு, நெஞ்சு ஆகிய பகுதிகளில் குத்தினார்கள். பிறகு எனது அம்மாவை தூக்கிக்கொண்டு சென்று மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன். மதுரையில் என் அம்மா ஒரு வாரம் சிகிச்சை எடுத்துக்கொண்டார். மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருக்கும்போது நான் கீழவளவு காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகார் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

எதிரிகளுக்கும் எனக்கும் தேர்தல் முன்விரோதம் காரணமாக பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். எதிரிகள் ஏற்கனவே என்மீது புகார் கொடுத்து அந்த வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். எதிரிகள் அணைவரும் கொடுக்கம்பட்டியை சேர்ந்தவர்கள் என்றால் கொன்னப்பட்டியயை சேர்ந்தவர்கள். தேர்தலில் 1ம் எதிரியின் மனைவி வெற்றிபெற்றார் என்றால் சரிதான். சம்பவம் 03.12.11ம் தேதி நடைபெற்றது என்றால் ஞாபகமில்லை. சம்பவம் முடிந்து 21 நாட்கள் கழித்து காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், தேர்தல் முன்விரோதம் காரணமாக எதிரிகள்மீது பொய்யான புகார் கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 65/2012

Deposition of witness for: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | : Ramu | Father/Husband Name | : Periyakaruppan |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 06.07.18. | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2018.

முதல் விசாரணை:

நான் கொன்னப்பட்டியில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். அ.சா.1ஐ தெரியும். எதிரிகளை தெரியும். சுமார் 6, 7 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் சம்பவம் நடந்ததாக சொன்னார்கள். சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. இரண்டு நபர்களை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசுதரப்பில் இந்த சாடசியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டப்பட்டது. சாட்சியின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்களைபரிசீலனை செய்து இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154ன்கீழ் அனுமதி வழங்கப்பட்டது.

குறுக்கு விசாரணை அரசுதரப்பில்:

போலிசார் விசாரணையில் 03.12.11ம் தேதி இரவு 07.30 மணிக்கு கொன்னப்பட்டி மந்தையில் வைத்து எதிரிகள் அணைவரும் சாட்சி தனபாக்கியம் என்பவரை அசிங்கமாக பேசியும், எதிரி கணபதி என்பவர் உருட்டுக்கட்டையால் தனபாக்கியத்தை அடித்தும், சுமதி என்பவர் தனபாக்கியத்தை தலைமுடியைப்பிடித்து இழுத்து கீழே தள்ளிவிட்டு எதிரிகள் அணைவரும் சேர்ந்து கையாலும். கால்களாலும் அவரை அடித்து காயப்படுத்தியதாகவும், அதை தடுக்க சென்ற அ.சா.1ஐயும் எல்லோரும் ஒன்று சேர்ந்து கம்பாலும், கைகளாலும் அடித்து ஊமைக்காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றும் சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைத்து எதிரிகளுக்கு சாதகமாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.